அமைதியும் ஆனந்தமும்

பாகம் -1

ஸ்ரீமத் பகவத்கீதை

701 ஶ்லோகங்களும்

தமிழ்ப்பாடல்களாய்
இயற்றியவர்

ஆச்சார்ய
ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி

அமைதியும் ஆனந்தமும்

பாகம் - 1

(அத்தியாயம் : 01 முதல் 06 வரை)

ஜீவாத்ம விசாரணை

ஸ்ரீமத் பகவத்கீதை

701 ஸ்லோகங்களும்

மூலம்

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா

தமிழ்ப்பாடல்களாய்

இயற்றியவர்

ஆச்சார்ய
ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி

ஸ்ரீமத் பகவத்கீதை

தமிழில் பாடல்களாய் இயற்றியவர்

ஆச்சார்ய
ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி

Print Type : E-Book in PDF format

First Edition : 2023

Revised Edition: 2025

For Suggestions and Corrections,

Please email to: Shri. K.Balachandran   omsivakbc@yahoo.co.in

குருபரம்பரா
GURUPARAMPARA

பூஜ்ய குருதேவ்
ஸ்வாமி சின்மயானந்த மகாராஜ்



08-05-1916 to 03-08-1993

ஹரி: ஓம்!

குருஜி

ஸ்வாமி தேஜோமயானந்தாஜி

சின்மய மிஷன்

ॐ

Dear Krishnatmananda,

Hari Om!

I am glad that you have completed the project of the Geeta as Tamizh songs. Congratulations!

With Love & Om,

Tejomayananda

ஓம் தத் ஸத்

|| சமர்ப்பணம் ||

பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கும்

பூஜ்யகுருதேவ் **ஸ்வாமி சின்மயானந்த மகராஜ்**
அவர்களுக்கும்

பூஜ்யகுருஜி **ஸ்வாமி தேஜோமயானந்தாஜி**
அவர்களுக்கும்

ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸ்லோகங்களை
தமிழ்ப்பாடல்களாய் சமர்ப்பிக்கின்றோம்

இக்கீதையை உபதேசித்தருளி, அதைப் படித்தும், புரிந்துகொண்டும், அதன்படி வாழவும் வழிகாட்டியருளிய
ஆச்சார்யர்

ஸ்வாமி வாகீஸானந்த ஸரஸ்வதி
அவர்களின் திருப்பாதங்களில்
இக்கீதைத் தமிழ்ப்பாமாலையை
அர்ப்பணிக்கின்றோம்

சிருங்கேரி ஸ்ரீ ஸ்ரீ சந்நிதானம் அவர்களின் ஆசியுரை

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी
Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.

दक्षिणाम्नाय शृङ्गेरी श्रीशारदापीठाधीश्वर
जगद्गुरु शङ्कराचार्य श्रीश्रीश्रीभारतीतीर्थमहास्वामिकरकमलसञ्जातानां
जगद्गुरु श्रीश्रीश्रीविधुशेखरभारतीमहास्वामिनामनुग्रहसन्देशः

அத்வைத ஸித்தாந்தத்தைப் போதிக்கும் நூல்களுள் ஸ்ரீமத்பகவத்கீதை மிகவும் முக்கியமானது. அர்ஜுனனை நிமித்தமாகக் கொண்டு உலகோரனைவருக்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே இதை உபதேசம் செய்திருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு. இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் எதிர்கொள்ள வேண்டிவரும் சவால்களுக்கான தீர்வு இதில் உபதேசிக்கப்பட்டுள்ளது. இதைப் படிப்பதன் மூலம் மனிதன் தன்னுடைய பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடியத் திறனைப் பெறுகிறான். இந்த ஒரு நூலைச் சரியாகப் படித்து இதில் உபதேசித்தபடி வாழ்வதின் மூலமே ஒருவன் தன்னுடைய வாழ்க்கையை பயனுள்ளதாக்கிக் கொள்ளமுடியும். இதில் பகவான் செய்துள்ள உபதேசங்களைத் தெளிவாக அறிந்து கொள்வதற்காக ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கராசார்யாள் கீதாபாஷ்யத்தை இயற்றி நம்மை அனுக்கிரஹித்துள்ளார்கள். இதை ஒரு தகுதிவாய்ந்த குருவினிடம் கற்றுணர்ந்து அதன்படி தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு ஒவ்வொரு மனிதனும் முயற்சி செய்யவேண்டும். இவ்விஷயத்தை மனதில் நன்றாகப் பதித்துக்கொண்டு சின்மயா மிஷனைச் சேர்ந்த ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி அவர்கள் கீதையைப் படித்து அதை வெகுகாலம் அனுஸந்தானம் செய்து "அமைதியும் ஆனந்தமும்" என்ற தலைப்பில் கீதையிலுள்ள சுலோகங்களை தமிழில் சிச்சிறு பாடல்களாக எழுதியுள்ளார். தமிழில் கீதையின் பொருளைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்காக இப்புத்தகத்தைப் பிரகடனம் செய்வது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இந்த நல்ல காரியத்தைச் செய்துள்ள ஸ்வாமிகளுக்கும் மற்றும் இதைப் படிக்கும் ஆஸ்திக பெருமக்களுக்கும் சிரேயஸ் கிடைக்கட்டும் என்றும் ஆசீர்வதிக்கிறோம்.

श्रीः

इति नारायणस्मरणम्
विधुशेखरभारती
शृङ्गेरीजगद्गुरु श्रीश्रीश्रीभारतीतीर्थ महास्वामिनां करकमलसञ्जातः

शृङ्गगिरिः
शोभकृद्वत्सरकन्यामासकृष्णत्रयोदशी
गुरुवासरः १२.१०.२०२३

சகடபுரம் ஸ்ரீ ஸ்ரீ பெரியவா அவர்களின் ஆசியுரை

ஸ்ரீவித்யா பாது மாம் ஸதா

ஸ்ரீஸ்ரீ ஜகத்குரு பதரி சங்கராச்சார்ய மஹாஸம்ஸ்தானம்

சகடபுரம்-ஸ்ரீவித்யாபீடம், ஸ்ரீக்ஷேத்திர சகடபுரம்

ஸ்வஸ்தி! ஸ்ரீமதகிலஜகத்வித்யோதமானஹ்ருத்யானவத்யாத்யவித்யாத்யுதிக்ருத்யோதிக்ருதபேதவித்யானாம்; ப்ரணவமனுஸ்மரணார்ஹணாப்ரணயப்ரீணிதஸ்மரஹரண-பவதரணநதசரண-ஜிதகரண-சர்வாணீரமணரமணீயசரணஸ்ரீபர்ணானாம்; ஸர்வஸர்வம்ஸஹாஸன்சரணதேவபரிசரண-வித்யாசரண-ஸ்தவகரண-பக்தசித்பரணஸமேதிதஸதாதாஸனாதனதர்மதாம்னாம்; பாஷண்டமதஷண்டகண்டனோத்தண்டப்ரகாண்டபாண்டிதீஸம்மண்டிதாசாமண்டலானாம்; ஆர்யவர்யபாராசர்யவசஃகார்யபாஷ்யஸபர்யாபர்யாயமோதிதார்யதுர்யாணாம்; அபிரூபவல்லபஸம்பாயகஸபாஸம்பாவிதகலாஸம்ப்ருதாம்போபவபூபாமினிப்ரூபங்காபிமானஸம்பேதகானாம்; விகதநீதிவஸுமதீபதிஸுநீதிபோதனாதீநிக்ருதயசோதநானாம்; நிகிலவிபுலாதலஸஞ்சலனஸஞ்சாலிததாசபலகோலாஹலபலாவலேபவிதலனவிலாஸகலிதவிமலவேதாந்தமதமதல்லிகாஸமுல்லாஸிதோபலப்திமல்லேகானாம்; மஹாமோஹக்ராஹநிர்ஹரணஹரிப்ரஹரணாயமானானாம்; தனித்வஸ்தஸமஸ்தநாஸ்திகஸ்தோமவிஸ்த்ருதவாக்விஸ்தராணாம்; ஸத்யோகநிஷ்ட ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்யஸச்சர்யபகவதாசார்யஜகத்குருஸ்ரீஸ்ரீசங்கரபகவத்பூஜ்யபாதானாம்; ஸச்சிஷ்யவர்யஸ்ரீமஜ்ஜகத்குருத்தராம்னாயஜ்யோதிஷ்பீடாதீச்வர ஸ்ரீமதாசார்யஸ்ரீதோடகபகவத்பாதப்ரவர்திதஸ்ரீமத்வேதாந்தஸத்குருபரம்பராவிப்ராஜமானயோகிராஜ ஸ்ரீஸ்ரீஸத்யதீர்த்தமஹாமுனிந்தரஸத்ஸம்பரதாயவிலஸிததுங்கபத்ராதீரநிவாஸஸ்ரீசகடபாதாக்யமஹர்ஷிபரிபாவிதாச்ரமஸ்ரீக்ஷேத்ரசகடபுரவராதீச்வர ஸ்ரீசத்குருதத்தாத்ரேய-ஸ்ரீசந்த்ரமௌலீச்வர-ஸ்ரீவித்யாவிச்வேச்வரஸ்ரீவித்யாம்பிகாஸ்ரீமத்ராஜராஜேச்வரிதேவ்யம்பா-ஸ்ரீஸந்தானவேணுகோபாலக்ருஷ்ணதிவ்யபாதபத்மாரதகஸ்ரீவித்யாபீடாதீச்வரபரமபூஜ்யபாதஸ்ரீமஜ்ஜகத்குருஸ்ரீஸ்ரீராமசந்த்ரானந்ததீர்த்தமஹாஸ்வாமிகுருகரகமலானுக்ரஹஸஞ்ஜாத

ஜகத்குரு ஸ்ரீவித்யாபிநவ ஸ்ரீக்ருஷ்ணாநந்ததீர்த்தஸ்வாமிபிஃ

அஸ்மதந்தேவஸதாம் ஸ்ரீமதாம் கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி
ஸ்ரீதேவதாராதனஸமயே காலத்ரயவிரசிதாஃ சுபம்யுதரா ஆசீஃபரம்பராஃ ஸமுல்லஸந்துதராம்.

பகவத் கீதா கிஞ்சித் அதீதா..... எனவும், கேயம் கீதா நாம ஸஹஸ்ரம்..... எனவும் பஜகோவிந்தத்தில் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் அருளியுள்ளார்கள். இத்தகைய உலக ப்ரசித்தி மிக்க கீதையானது வாழ்வியல் பாடமாகும். கீதையை முறையாகப் படித்தவர்களுக்கு வாழ்வை சுலபமாக வாழத்தெரியும் அளவிற்கு ஞானம் கிட்டும்.

கீதாஸ்ரயேऽஹம் திஷ்டாமி கீதா மே சோத்தமம் க்ருஹம் ।
கீதா ஜ்ஞானமுபாஸ்ரித்ய த்ரீந்லோகாந் பாலயாம்யஹம் ॥

கீதையை அண்டி நான் வாழ்கிறேன். கீதைதான் என்னுடைய சிறந்த விடு, கீதையின் ஞானத்தைக் கைக்கொண்டு நான் மூவுலகங்களையும் காக்கிறேன் என வராஹ புராணத்தில் பகவான் அருளுகின்றார். இந்தகைய மஹா கீர்த்தி உடைய ஸ்ரீமத் பகவத்கீதையை நீங்கள் எளிய நான்கு வரி தமிழ்ப்பாக்களாக உரையாக எழுதியுள்ளது அறிந்து சந்தோஷமடைகின்றோம். பக்தியும், தமிழ் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் இதனை ஓதியுணர்ந்து கீதையின் பொருளினை உள்வாங்கி வாழ்வில் சிறந்தோங்கிட உதவியாக இந்நூல் அமையும். நீங்கள் மென்மேலும் இது போன்ற அறப்பணிகளில் ஈடுபட்டு, சமூகத்திற்குப் பயனுள்ள நற் செயல்களைச் செய்திட அம்பாளின் சரண கமலங்களைப் பிரார்த்தித்து ஆசிக்கிறேன்.

ஸ்ரீஃ

சுபக்ருத் வருஷம்
5-2-2023, ஞாயிற்றுக்கிழமை
மாக பூர்ணிமா

இதி ஸ்ரீநாராயண ஸ்ம்ருதயஃ

ஆசியுரை

ॐ

THE DIVINE LIFE SOCIETY (REGD.)

(ESTABLISHED: 1936)

Propagates Yoga and Vedanta and the Ethical and Spiritual Culture of India. Promotes Universal Love, the Unity of Religions, the Ideal of Brotherhood, and the Spirit of Service among Mankind.

(*Founder:* H.H. SRI SWAMI SIVANANDA)

P.O. SHIVANANDANAGAR – 249 192, DISTT. TEHRI-GARHWAL, UTTARAKHAND, HIMALAYAS, INDIA
Phone: (0135) 2430040, Fax: (0135) 2442046, *Rly. Stn.:* RISHIKESH, *N.Rly.*)
website: www.sivanandaonline.org **E-mail:** generalsecretary@sivanandaonline.org

ॐ

ஆசியுரை

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை"

என்ற மறையோர் வாக்கின்படி நாம் இப் புவி வாழ்க்கையை வாழ்ந்திட வழிகாட்டித் தரும் வேதநெறிகளை, விளக்கித் தருபவை அறநூல்கள். அவற்றுள் ஒன்றான "பகவத்கீதை", திருப்பாற்கடலில் பாம்பணை மீது அறிதுயில் கொள்ளும் பரமன், பார்த்தனுக்கு அன்று போர்க்களத்தில் உபதேசித்து அருளியது ஆகும். இந்நூலினை மெஞ்ஞானிகள் போற்றுவது போலவே இக்கால அணு விஞ்ஞானிகளான, ஐன்ஸ்டைன், ஓப்பன்ஹைமர் போன்றோரும் போற்றுவது இதன் தனிச் சிறப்பினை பறைசாற்றுகின்றது. இந்நூல் உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் பொதுமறையாக விளங்குவது, மனித குலம் செய்த புண்ணியமே ஆகும். அருமறைகள் நிறைந்து நிற்கும் தொன்மையான தமிழ் மொழியிலும் இந்நூல் முன்பு பலரால் தமிழ் ஆக்கப்பட்டு, தமிழர்களின் சிந்தனைக்கும், வந்தனைக்கும், செயற்பாட்டிற்கும் விருந்தாக அமைந்துள்ளதை நாம் காண்கிறோம். காலத்திற்கு ஏற்றவாறு ஒரு மொழியில் மாற்றங்கள் ஏற்படுவது, காலத்தை வென்று நிற்கும் அதன் தன்மையை காட்டுகின்றது. எனவே தற்கால தமிழில், தமிழர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் எளிய தமிழில் பகவத்கீதையை வழங்கும் முயற்சியே, சின்மயதாசன் திரு சுவாமி கிருஷ்ணாத்மாநந்தரின் இந்த நூல். 'இல்லந்தோறும் பகவத் கீதை' என்ற கீதா ஞானயக்ஞ பணியை பல்லாண்டுகள் புரிந்த அனுபவத்தின் பயனாக, சுவாமி கிருஷ்ணாத்மாநந்தர், கீதையை இனிய எளிய பாடல்களாக ஆக்கித் தந்துள்ளார். வாழ்க்கை கடலில், ஆசைப் புயலில் சிக்கித் தவிக்கும் மனித உள்ளங்களுக்கு கரையேறும் சாத்தியத்தை காட்டும் கலங்கரை விளக்கமாக இந்நூல் அமைய எல்லாம் வல்ல கீதாச்சாரியன் அருளை வேண்டுவோம்.

(சுவாமி பத்மநாபானந்த)
பொதுச்செயலர்,
தெய்வீக வாழ்க்கைச் சங்க தலைமையகம்,
ரிஷிகேசம்.
நாள்- 20 - 2 - 2022

ஆசியுரை

உ

ப்ரஹ்மைவ ஸத்யம்

SRI SWAYAMPRAKASA AVADHUTHA SADASIVA TRUST

Sri Sri Judge Swamigal Adhishtanam, East 7th Street,

PUDUKKOTTAI-622 001

Phone: 04322-221440, 222128

Email: sribhuvaneshwari@gmail.com



ஆசியுரை

Date : 07/04/2023

பார்தா2ய ப்ரதிபோ3தி4தாம் ப4க3வதா நாராயணேன ஸ்வயம்

வ்யாஸேன க்3ரதி2தாம் புராணமுனினா மத்4யே மஹாபா4ரதம்

அத்3வைதாம்ருதவர்ஷிணீம் ப4க3வதீமஷ்டாத3*ஶா*த்4யாயினீம்

அம்ப3 த்வாமனுஸந்த3தா4மி ப4க3வத்3கீ3தே ப4வேத்3வேஷிணீம்

போற்றத்தக்க முனிவராகிய வியாஸரால் மஹாபாரதத்தின் நடுவில் வைக்கப்பட்டவளும், அர்ஜுனனுக்காக பகவான் நாராயணனாலேயே உபதேசிக்கப்பட்டவளும், அத்வைதமாகிய அமுதத்தை வர்ஷிப்பவளும், பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டவளும், ஸம்ஸார ஸாகரத்தின் எதிரியும் ஆன பகவத் கீதை என்ற அன்னையை நமஸ்கரிக்கிறேன்.

கீதையின் பெருமையை இந்த ஸ்லோகம் கூறுகிறது. ஸாக்ஷாத் பகவானான நாராயணானாலேயே உபதேசிக்கப்பட்டது. அதே நாராயணனின் அம்சமே ஆன வியாஸரால் மகாபாரதம் என்ற நூலில் நடுவில் பதக்கம் போல பிரகாசிக்கிறது.

பகவத்கீதை ஒரு தத்துவ நூல் ! பாண்டவர்கள் ஐவரும் மனிதனின் ஐம்புலன்கள்; ஸ்ரீகிருஷ்ணன் இவற்றைச் செலுத்தும் நம் மனம்; கௌரவர் நூற்றுவர் மனித மனத்தில் ஒளிந்திருக்கும் கணக்கற்ற தீய குணங்கள்; கௌரவரின் பார்வையற்ற தந்தை நம் குருட்டுப் புத்தி;

பாசம் மேற்கொண்ட அர்ச்சுனன் தன் உற்றாரைப் போரில் கொல்வதா என்ற மயக்கத்துடன் இருந்தபோது (மாயை வசப்பட்ட ஆத்மா ஞானத்தை அடையும் வழியில் தயங்கி நிற்கும் போது) ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனின் அறியாமை எனும் மயக்கத்தைப் போக்கி, தொடங்கிய யுத்தத்தை செய்துமுடிப்பது தான் சரியானது என்று போதிக்கிறார்.

உபநிஷதங்கள், ப்ரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்று நூல்களும் ப்ரஸ்தானத்ரயம் என்று குறிக்கப் படுகின்றன. நம் ஸநாதன தர்மமான ஹிந்துமதத்தை வேதமதம் என்று சொல்வர். வேதங்களில் இருந்து எடுக்கப்பட்ட ஸாரமாக உபநிஷதங்கள் காப்பாற்றி வைக்கப் பட்டு இருக்கின்றன. உபநிஷதங்களின் தன்மை என்ன அதன் போக்கு எத்தகையது என்று இயம்புவது ப்ரம்மசூத்திரம். அதில் அடங்கியுள்ள கருத்துக்களை எல்லாம் தெளிவுபட விளக்குவது பகவத் கீதை.

ஸர்வோபநிஷதோ3 கா3வோ தோ3க்3தா4 கோ3பாலநந்த3ந:

பார்தோ2 வத்ஸ: ஸுதீ4ர்போ4க்தா து3க்3த4ம் கீ3தாம்ருதம் மஹத்!

பசுக்களாக உபநிடதங்கள் நிற்க, அவைகளிடம் பால் கறப்பவனாக கோபாலநந்தனன், பாலைப் பருகும் பசுங்கன்றாக பார்த்தன், அதனால் கிடைத்தது அமுதமான பாலாகிய கீதை!

5000 ஆண்டுகளுக்கு முன் கிருஷ்ணன் அர்ஜூனனுக்கு சொன்ன உபதேசங்கள் எல்லா காலத்திற்கு ஏற்றதாக அமைந்தது தான் இந்த தனிச்சிறப்பு. ஒருவரின் அனைத்து விதமான பிரச்சனைகளுக்கும் தீர்வாக இந்த உபதேசம் அமைந்துள்ளது. வாழ்க்கை மற்றும் வாழ்க்கையின் உண்மைகள் ஆகியவற்றை இந்த நூல் எடுத்துச் சொல்கிறது. ஒரு சாதாரண மனிதனுக்கு என்னவெல்லாம் சந்தேகம் வருமோ அவை அத்தனைக்கும் விளக்கமாக பதிலளித்துள்ளார் பகவான் கிருஷ்ணர். அதனாலேயே அனைத்து நூல்களுக்கும் தலைமை நூலாக பகவத் கீதை விளங்குகிறது.

சங்கரர்,ராமானுஜர், மத்வர் ஆகிய மூன்று ஸம்ப்ரதாய ஆசாரியர்களும் இந்த நூல்களுக்குத் தத்தமது பார்வையின் அடிப்படையில் உரை எழுதியிருகிறார்கள்.

பிற்காலத்தில் பால கங்காதர திலகர், வினோபாவே, காந்திஜி, அரவிந்தர், ஸர்வபள்ளி ராதாகிருஷ்ணன், சின்மயானந்தர், சித்பவானந்தர் ஆகியோர் ஸ்ரீபகவத் கீதைக்கு விரிவுரை எழுதியுள்ளார்கள்.

மஹாகவி பாரதியாரும் தீந்தமிழில் பகவத் கீதையை மொழிபெயர்த்துள்ளார்.

அந்த வரிசையில் அளவில்லாப் பெருமை கொண்ட பகவத் கீதையை சின்மயா மிஷனைச் சேர்ந்த நம் அன்புக்குரிய ஸ்வாமி க்ருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி, பகவத் கீதையின் 700 ச்லோகங்களையும் 700 தமிழ்ப்பாடலாக இயற்றியுள்ளார்.

இந்நூல் ஆன்மீக ஸாதகர்களுக்கு மட்டுமல்லாது, `சொல்லும் பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' எனும்படி தீந்தமிழ் அறிந்தோர் அனுபவித்து உணரும்படி இருக்கும் என்பதில் ஐயமில்லை. நூலாசிரியருக்கு நமது வாழ்த்துக்கள் என்றென்றும் உரித்தாகுக!

இந்நூலினை படித்து இன்புறும் எல்லா பக்தர்களுக்கும், ஸாதகர்களுக்கும் பரமானந்த வாழ்வு நிலைத்திருக்க ஜகன்மாதா ஸ்ரீ புவனேச்வரி தேவியை பிரார்திக்கிறேன்.

ஆனந்தம் சுபம் மங்களம் ! ஜய புவனேச்வரி!

ஸ்ரீ ப்ரணவாநந்த ஸ்வாமின:
ஸ்ரீ புவனேச்வரி அவதூத வித்யா பீடம்
புதுக்கோட்டை

நூன்முகம்

ஸ்ரீமத் பகவத்கீதை ஓர் ஆனந்த வர்ஷிணி – துக்க நிவாரணி

ஸ்ரீமத் பகவத்கீதை மிகப் பழமையான ஓர் நூல். பகவான் ஸ்ரீகிருஷ்ணரால் நேரடியாக அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. எவ்விதம் சஹஸ்ரநாமம் என்றால் "விஷ்ணு சஹஸ்ரநாமம்" என்று அறியப்படுகிறதோ, அவ்விதமே கீதை என்றாலே ஸ்ரீமத் பகவத்கீதை என்று அனைவருக்கும் தெரிந்த ஓர் நூலாகத் திகழ்கிறது.

"ஏகம் சாஸ்திரம் தேவகீ புத்ர கீதம்" என்று சிவபெருமான் பார்வதியிடம் கூறியதாக ஒரு கீதாமாஹாத்மிய ஸ்லோகம் பறைசாற்றுகிறது. பகவத்கீதா கிஞ்சிதகீதா . . . யமேனநசர்ச்சா" என்று பஜகோவிந்தத்தில் ஆதிசங்கரர் கீதையை யாரொருவன் சிறிதளவே படித்தாலும், யமனிடம் யாதொரு பயமுமில்லை என்று பறைசாற்றுகிறார்.

பலமகான்கள் கீதைக்கு விரிவுரைகளை எழுதியுள்ளனர். மேலும், பலவிதங்களில் அதன் பொருள்களும், பயன்களும் நூலாகவும், பாடல்களாகவும் எழுதப்பட்டுள்ளன.

இக்கீதை நூல்களை ஆராய்ந்தால் எதற்காக அது உபதேசிக்கப்பட்டது என்பதில் அனைவருக்கும் ஓர் ஒருமித்த எண்ணமும், கருத்தும் உள்ளதை நாம் நன்றாக அறிய முடிகின்றது. அது யாதெனில், **"சோக-மோகம்"** எனும் சம்சார சமுத்திரத்தில் [சுகதுக்கமெனும் துன்பக்கடலில்] மூழ்கித் தவிக்கும்

அனைவரையும், மூழ்காமல் உய்வித்துக் கரையேற்றும் பொருட்டு, அர்ஜுனனை நிமித்தமாகக் கொண்டு இந்த ஞானசாரத்தை [வேத / வேதாந்த சாரத்தை] கீதையென்னும் ஞானாம்ருதமாக நமக்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உபதேசித்துள்ளார்.

ஸ்ரீகிருஷ்ணரின் இக்கீதையில் 'கர்மோபதேசம், பக்தியுபதேசம், யோகோபதேசம், தியானோபதேசம் என இவ்விதம் பலப்பல உபதேசங்கள் இருப்பினும், தம்புரா சுருதி போன்று அனைத்தினூடேயும் ஞானாம்ருத உபதேசமானது ஆதாரச் சுருதியாயுள்ளதை ஞானியர் பலர் அறிந்துளர்.

ஒருமுறை **ஸ்ரீ சிருங்கேரி மகாசன்னிதானம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்** பக்தர்களின் பிராத்தனைக்கு இரங்கி 'சின்மய கைவல்யா- சேலம்' எனுமிடத்திலுள்ள ஸ்ரீபிரம்ம கிருஷ்ணர் சன்னிதிக்கு 2012-ஆம் ஆண்டு மார்ச் மாதம் எழுந்தருளி ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவிற்கு புஷ்பார்ச்சனை செய்தபின் குழுமியிருந்த பக்தர்களை ஆசீர்வதித்தார்கள். பின்னர் அங்கிருந்து புறப்படும் சமயம் சின்மயமிஷினின் திட்டங்களைப் பற்றி நான் மகாசன்னிதானம் அவர்களிடம் கூறியபோது,அவர்கள் அனைவரையும் பார்த்து "ஸ்வாமி சின்மயானந்தரால் மற்றும் அவருடைய பெருமுயற்சியினால் ஏற்படுத்தப்பட்ட சின்மய மிஷன் வாயிலாக உபநிஷத்துகளின் மற்றும் ஸ்ரீமத் பகவத்கீதையின் சாராம்சமானது ஆங்கில மொழியில் பலருக்கும் கற்றுக் கொடுக்கப்பட்டதனால், ஸம்ஸ்கிருத மொழி அறியாதபோதும் அவர்களால் கீதையின் சாராம்சத்தைப் புரிந்து கொண்டு அதன்படி வாழ்க்கையை நடத்த முடிகிறது" என்று கூறி அருளினார்கள்.

அங்கு கூடியிருந்தோரிடம் ஸ்ரீமத் பகவத்கீதையைப் படித்துப் பயன் பெறுமாறு உற்சாகமூட்டினார்கள். இதைவிட மிகப்பெரிய அனுக்கிரகம் இருப்பதாகத் தோன்றவில்லை.

அதேபோல், **காஞ்சி மஹாபெரியவா என்று அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்** முன்பு ஒருமுறை மைலாப்பூரில் தங்கியிருந்த பொழுது, குருதேவர் ஸ்வாமி சின்மயானந்த மஹராஜின் ஞானவேள்வியானது நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், அங்குள்ள சிலர் காஞ்சி மஹாஸ்வாமிகளிடம் ‘ஸ்வாமி சின்மயானந்தர் கீதையையும், உபநிஷத்துகளையும் அதன் அர்த்தங்களையும் ஆங்கிலத்தில் அனைவருக்கும் விளக்கிச் சொல்கிறார்; அவரை இவ்விதம் செய்யக்கூடாதென்று கண்டிக்க வேண்டும்’ என்று முறையிட்டனர். அப்பொழுது, காஞ்சி மகாபெரியவா “நாமும் கற்பதில்லை, சொல்லிக் கொடுப்பதுமில்லை. பிறர் சொல்லிக் கொடுப்பதையும், கற்பதையும் கண்டிக்கச் சொல்வது எவ்விதம் சரி, அது தவறல்லவா” என்று வலியுறுத்தி யதார்த்தமாகக் கூறினார்.

எனவே, இவ்விதம் பல மகான்களால் பாதுகாக்கபட்டு வருகின்ற இப்பகவத்கீதை எனும் சாஸ்திரத்தின் ஶ்லோகங்களின் அர்த்தத்தை எளிதில் படித்தும், புரிந்துகொண்டும் வாழ தமிழ்ப்பாடல்களாய் திருஅருளாலும் குருஅருளாலும் வெளித்தோன்றியதே இப்புத்தகம்.

ஸ்ரீமத் பகவத்கீதை தமிழ்ப்பாடல்களாய்த் தோன்றிய விதம்

இவ்விதம் பலப்பலவிதமான பெருமைகளைக், கொண்ட ஸ்ரீமத் பகவத்கீதையின்பால், எமக்கு ஈர்ப்பு ஏற்படுவதற்கு ஓர் முக்கியக் காரணமாய் அமைந்தவர் எனது - தமிழ்நாடு சின்மய சாந்தீபநீ சாதனாலய – ஆச்சார்ய, ஞானப்பிழம்பு, சொல்வளச் செல்வர், தவத்திரு ஸ்வாமி வாகீஶானந்த ஸரஸ்வதி அவர்கள். எங்களின் சின்மய பிரம்மச்சாரி ஆன்மிக குருகுலப் பயிற்சியானது நிறைவுறும் சமயம் [மூன்று வருடம் 1990-1993], ஆச்சார்யரானவர் ஓர் வழிகாட்டுதலை வழங்கினார்.

“கடந்த மூன்று வருடங்களாக ‘ப்ரம்ம சத்தியம் ஜகத் மித்யா’ என்ற வேதாந்த சாரத்தைச் சந்தேகமறக் கற்றுக் கொண்டீர்கள். இனி உங்களின் சாதனைப் பயணத்தில் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வேதாந்த நூலை விருப்ப நூலாக ஏற்றுக்கொண்டு, வாழ்நாள் முழுவதும் அதன் கருத்துக்ளை ஆழமாக மீண்டும் மீண்டும் படித்தும், சிந்தித்தும் தெளிவுபெற வேண்டும்” என்று உபதேசித்தார். ஆச்சார்யர் அனைத்து வித்யார்த்திகளையும் தாங்கள் விருப்பப் பாடமாகப் பயில விரும்பும் நூலைத் தேர்வு செய்யுமாறு பணித்தார். ‘திருவாசகம், திருப்புகழ், உபநிஷத்’ என்று ஆளுக்கு ஒரு நூலை வித்யார்த்திகள் தேர்வு செய்தனர்.

எமது முறை வரும் பொழுது, எதை எடுப்பது என்று சிந்திக்காமல், “ஆச்சார்யரே! தாங்களே கூறுங்கள்” என்று வேண்டினேன். **அவர் “நீ ஸ்ரீமத் பகவத்கீதையை எடுத்து, நன்றாய் வாழ்நாள் சாதனை நூலாகப் பயில்”** என்றார்.

ஆச்சார்யரின் வார்த்தைகளைச் சிரமேற்கொண்டும், மனதில் நன்கு பதித்துக் கொண்டும், ஸ்ரீமத் பகவத்கீதையை நன்றாகப் படித்தும் அதன் ஆழமான கருத்துக்களைப், புரிந்துகொள்ள முயன்று வந்தோம். அவ்விதம் கற்றறிந்த விஷயங்களை ஞான வேள்விகளாகவும், தொடர் வகுப்புக்களாகவும் அனைவரிடமும் பகிர்ந்து கொண்டு வருகின்றோம்.

ஜனவரி 2017-ல் குருஜி தேஜோமயானந்தாஜி அவர்களின் அனுக்கிரகத்தால், வேதாந்த மனனத்திற்காக, ரிஷிகேசத்தில் அமைந்துள்ள ஸ்வாமி சிவானந்த மஹராஜ் அவர்களின் ஆசிரமத்தில் ஒரு வருட காலம் தங்கியிருந்தோம். அச்சமயம், கீதை ஸ்லோகங்கள் முழுவதையும் தமிழ்ப்பாடல்களாய் இயற்ற **முழுக்க முழுக்க ஓர் ஆத்ம சாதனையாகச் செய்ய வேண்டும் எனும் எண்ணம்** சங்கல்பமாய் நவம்பர் மாதத்தில் தோன்றியது.

கீதையின் ஸம்ஸ்கிருத மூல ஸ்லோகத்தின் ஒவ்வொரு வார்த்தையின் பொருளும் வெளிப்படும் விதத்தில் தமிழ்ப்பாடல்களாய் அமைக்க விரும்பினோம். கோவையாகவும், அதேசமயம் அழகாகவும் அமைய வேண்டும் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணரையும், குருதேவரையும் வேண்டி இத்தமிழ்ப்-பாடல்களை இயற்றத் துவங்கினோம். அதன்பொருட்டு, பகவான் ஸ்ரீ ஆதிசங்கரரின் கீதை பாஷ்யம், குருதேவர் ஸ்வாமி சின்மயானந்தரின் கீதைப் பேருரைகள், ஸ்ரீ தபோவனத்தின் வெளியீடான சங்கர பாஷ்ய தமிழாக்கம், கீதா பிரஸ்ஸின் தத்துவ விவேக உரை, ஸ்வாமி சித்பவானந்தரின் கீதை விளக்கம், ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதியின் வீடுதோறும் கீதை விளக்க நூல், ஸ்ரீ கிருஷ்ணவாரியரின் சங்கர பாஷ்யம் ஆங்கில உரை,

ஸ்ரீ ஞானேசுவரரின் உரை, , , , , போன்ற பல மகாத்மாக்களின் உரைகளைப் படித்து, அவற்றின் பொருள்களை மனதில் இருத்தி, தமிழ்ப்பாடல்களாய் வெளிக் கொணர்ந்தோம்.

தினமும் ஐந்து ஶ்லோகங்களைத் தமிழ்ப் பாடல்களாக இயற்றி, இறைவனுக்கு **“கீதை ஶ்லோகங்களை தமிழ்ப் பாமாலையாக”** அர்ப்பணித்து வந்தோம்.

இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் “ஸ்ரீகங்காமாதா இமயமலையிலிருந்து சமவெளிக்கு இறங்கி வரும் இடமான **ரிஷிகேசத்தில் துவங்கிய** ஸ்ரீமத் பகவத்கீதையின் அனைத்து ஶ்லோகங்களையும் [701] தமிழில் இயற்றுவது என்ற இவ்வாத்ம சாதனை நிறைவு பெற்ற இடம் **உடுப்பி ஸ்ரீகிருஷ்ணர் சன்னிதி**யாக அமைந்தது” என்பதுதான்.

முதற்கண், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிற்கும், பூஜ்ய குருதேவ் ஸ்வாமி சின்மயானந்த மகராஜ் அவர்களுக்கும், பூஜ்யகுருஜி ஸ்வாமி தேஜோமயானந்தா அவர்களுக்கும் இத்தமிழ்ப் பாடல்களை அர்ப்பணிக்கின்றோம்.

இக்கீதையைப் படித்தும், புரிந்து கொண்டும், அதன்படி வாழவும் வழிகாட்டியருளிய ஆச்சார்யர் ஸ்வாமி வாகீஶானந்த ஸரஸ்வதி அவர்களின் திருப்பாதங்களில் இக்கீதை தமிழ்ப்பாமாலையை சமர்ப்பிக்கின்றோம்.

ஆச்சார்யரின் வழிகாட்டுதலாகிய, “நீ ஸ்ரீமத் பகவத்கீதையை எடுத்து நன்றாக வாழ்நாள் சாதனை நூலாகப் பயில்” என்ற அறிவுரையானது, இவ்வாறு தமிழ்ப்பாடல்களாய்த் தோன்றியது கண்டு திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

இத்தமிழ்ப் பாடல்களைக் கணினியில் முழுமையாகத் தட்டச்சு செய்து பலமுறை திருத்தங்களையும் சீரமைப்புகளையும் பெருமுயற்சியோடு செய்து உதவிய **முனைவர் திரு. கி. பாலசந்திரன்** சென்னை, அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எவ்விதப் பிரதிபலனையும் எதிர்பாராது, சிரத்தையுடன் இப்பணியைச் செவ்வனே செய்த அவருக்கு இறைவன் நல்ஆரோக்கியத்தையும், ஆத்மஞானத்தையும் பூரணமாய் அருளப் பிரார்த்திக்கின்றோம்.

இத்தமிழ்ப்பாடல்களில் எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை முதலிய பல பிழைகளையும் திருத்தம் செய்த சேலம் **பண்டிதர், புலவர் ஸ்ரீ கிருஷ்ண சர்மா** அவர்களுக்கு ஆத்மார்த்தமாக நன்றி நவில்வதைத் தவிர என்ன கைம்மாறு செய்வோம். அவருக்கு இறைவன் நல்ஆரோக்கியத்தையும், ஆத்மஞானத்தையும் பூரணமாய் அருளப் பிரார்த்திக்கின்றோம்.

கணினியில் பதிவேற்றம் செய்திருந்தாலும், கொரோனா காரணமாக இரண்டு வருட காலமாக புத்தகமாக அச்சிட்டு வெளிக்கொணர இயலவில்லை. தற்சமயம், இறையருளாலும், குருவருளாலும், நல்லன்பர்களின் உதவியுடன் ‘இ-புத்தக’மாக வெளியிடப்படுகிறது.

இப்பாடல்களைக் கணினியில் நூலாக வடிவமைத்து, ‘இ-புத்தக’மாக வெளிக்கொணர்வதற்கு பெருமுயற்சியுடனும், முழு ஈடுபாட்டுடனும் பணியாற்றிய **திரு.வெங்கடாத்ரி** அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் நல்ஆரோக்கியத்தையும், வளமையையும் அருளிட இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

இந்நூலை இயன்றவரை பிழையில்லாமல் வெளிக்கொணர முயன்றுள்ளோம். இந்நூலைப் படித்துப் பயில்பவர்கள் பிழைகளைக் கண்டால், அதை முனைவர் பாலசந்திரனின் **omsivakbc@yahoo.co.in** என்ற மின்னஞ்சலுக்கு [இ-மெயில்] அனுப்ப வேண்டுமாய், பணிவுடன் விண்ணப்பிக்கின்றோம்.

சுபம். ஹரி ஓம்!

ஓம் நமோ நாராயணாய.

சகடபுரம்

01-01-2023

.

பாயிரம்

ஹரி ஓம்

ஆச்சார்ய ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி அவர்களின் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்தமைக்கப்பட்ட "ஸ்ரீமத் பகவத்கீதை" என்னும் பெருநூலுக்கு அன்னாரின் மெய்யொழுக்க மாணாக்கன் சேலம் கிருஷ்ணசர்மா அளித்த பாயிரம்.

" வையம் துலங்கி வளமுறத் தோன்றச்
செய்யும் திறமிது வெனக்கை யற்ற
தனஞ்சயன் தனக்கு மாயவன் நவிற்றிய
குணமிகு கீதைப் பொருண்மை யதனை
அவனிவாழ் தமிழர் அகங்கொண்டு தெளியக்
கவனமார் தமிழ்ப்பா தகவுற யாத்துத்
தந்தனர் கிருட்டிணாத் துமாநந்த சரசுவதி
செந்தமிழ் வடமொழி மெய்ப்பொருள் வல்லோர்
ஸ்ரீமத் பகவத் கீதை எனும்பெயர்
மாட்டெறிந் தியற்றிய பனுவற் றிறத்தொடு
பிறவிச் சுழல் தனை வீட்டுந்
திறங்கொளுத் தினராற் சின்மயற் றொழுதே "

அணிந்துரை

ஸ்ரீமத் பகவத்கீதையை இத்தமிழ்ப்பாடல்களாய் வெளிக் கொணர்ந்துள்ள ஆச்சார்ய ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி அவர்கள், **1997-ம்** வருடம் கோவை சாயிபாபா காலனியிலமைந்த ஒரு பள்ளியில் "கீதையைத் தொடர் வகுப்புகளாக" இருமாதங்களுக்கு "ஒரு வாரம் - ஒரு அத்தி-யாயம்" என்ற முறையில் போதித்து வந்தார். அதில் கலந்து கொண்டு கீதையை முறையாகக் கற்கவும், பின்னர் அவரின் மாணாக்கனாக ஆகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அச்சமயத்திலிருந்து அவர் எனக்கு வழிகாட்டி வருகின்றார்.

ஒருமுறை அவர் மே **2015-ல்,** தொலைபேசியில் அழைத்து குருதேவர் ஸ்வாமி சின்மயனந்தர் அவர்களின் நூற்றாண்டு [1916-2016] விழாக் கொண்டாட்டத்தின் அங்கமாக சேலத்தில், "**இல்லந்தோறும் கீதை**" என்ற மகாஞான வேள்வியில், ஸ்ரீமத் பகவத்கீதையை தமிழில், சின்மய இயக்கத்தைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட ஆச்சார்யர்களின் துணைகொண்டு தினந்தோறும் ஒரு இல்லத்தில் இரு பாடல்கள் என 365 இல்லங்களில் விளக்க இருப்பதாகவும், அதைக் குறுந்தகட்டில் பதிவுசெய்ததைக் கேட்டுவிட்டு, இரு ஶ்லோகத்திற்கு ஒரு பக்கம் என்ற அளவில் தொகுத்துத் தருமாறும் பணித்தது எனக்குப் பேராச்சர்யத்தையும், மகிழ்ச்சியையும் தந்தது.

வாழ்நாள் சாதனை - விழாமலர்

நூலாகத் தொகுக்க வேண்டுமென்றால் அதைப்பற்றிய அறிவும் இருந்தாக வேண்டுமென்பதால், 20 ஆசார்யர்களும் நாள்தோறும் கூறிய கீதைக் கருத்துக்களை சற்றுஆழமாக ஆராயத் துவங்கினேன். இது எனது வாழ்நாள் சாதனையாக அமைந்தது. இவ்வாறுதான், நான் என் ஆன்மீகச்சாதனைப் பணியை அவர் அனுக்கிரகத்தால் துவக்கினேன். இச்சிறுபணி ஜுன் 2016-ல் முடிந்து, அது **நூற்றாண்டு விழா மலராகச்** சின்மய மிஷன், சேலம் மையத்தால் வெளியிடப்பட்டது.

தொகுப்புரையை அவரிடம் மாதாமாதம் அனுப்பிவிட்டு இடையிடையில் நேரிலும் சென்று கலந்தாலோசித்து வந்தேன்.

இவ்விழாவின் நிறைவு சமயத்தில், ஒருமுறை ஒவ்வொரு அத்தியாயத்தையும் சுருக்கமாக ஒரு பக்கம் என்ற அளவில் பாடல்களாக இயற்றியளித்தால் சாதகர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்று பேசினோம். உடனே அன்றிரவே அவரும் கவிதை நடையில் சொல்லச் சொல்ல, நான் அதை எழுதினேன். பின்னர், அதுவே **“ஞானச்சிதறல்” என்ற சிறுநூலாக அந்நூற்றாண்டு விழாவில் வெளியிடப்பட்டது. அதை அவர் சுமார் ஆறு மணி நேரத்திற்குள் இயற்றினார் என்பது மிக்க ஆச்சர்யமான விஷயம்.**

இவ்வாறு “ஞானச்சிதறல்” வெளிவந்த பிறகு, ”இதை ஏன் விரிவாக்கி கீதையின் **அனைத்துச் ஸ்லோகங்களையும் தமிழில் பாடல்களாக இயற்றக்கூடாது?**” என்ற எண்ணம் அவரிடம் எழுந்தது. அதன்பின், அவர் “தினமும் ஐந்து பாடல்களை இயற்றுவேன்” என்று **2017** நவம்பர் மாதத்தில் சங்கல்பம் செய்துகொண்டு, கீதையின் **ஸம்ஸ்கிருத மூல ஸ்லோகத்தின் ஒவ்வொரு வார்த்தையின் பொருளும் வெளிப்படும் விதத்தில் தமிழ்ப் பாடல்களாக** அமைக்க விரும்பி, கோவையாகவும், அதேசமயம் அழகாகவும் அமைய வேண்டும் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணரை வேண்டித் தமிழ்ப்பாடல்களாக இயற்றத் துவங்கினார். அதை அவ்வப்பொழுது அவர் எனக்குக் கைபேசி மூலம் பகிர, நான் கணினியில் தட்டெழுத்து செய்து வந்தேன். **இவ்வாறுதான், இந்த ஸ்ரீமத் பகவத்கீதையின் 701 ஸ்லோகங்களும் தமிழ்ப் பாடல்களாக ஒரு வருடத்தில் உருப்பெற்றது**. அவரின் இச்சங்கல்பம் இன்று ஓர் புத்தகமாக உருவெடுத்தது, ஆன்மீக சாதனையாளர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் என்று கருதுகிறேன்.

நூலின் சிறப்பு அம்சம்

இந்நூலின் சிறப்பு அம்சங்களாக நான் கருதுவதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்:

- இக்கீதையின் தமிழ்ப்பாடல்கள் ஆதிசங்கரர் எழுதிய கீதை பாஷ்யத்தின் கருத்துக்களை முழுமையாகப் பிரதிபலித்திருப்பது ஓர் விசேஷம்.
- ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸம்ஸ்கிருத மூலப்பாடலின் கருத்துக்கள் தமிழ்ப்பாடல்களாய் மிக அழகாகவும்-ஆழமாகவும், அதே சமயம் மிகவும் எளிய தமிழ் நடையுடன் கூடியதாகவும் அமைந்திருப்பது மிகவும் சிறப்பான அம்சம்.
- ஒருவர் மூல ஶ்லோகத்தை ஸம்ஸ்கிருதத்தில் படித்திராவிட்டாலும், இத்தமிழ்ப்பாடல்களை மட்டும் படித்தாலே மூல ஶ்லோகங்களின் கருத்துக்களை நிச்சயம் தெளிவாக அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் இயலும் என்றால் அது மிகையாகாது.

என்றும் விடுவிப் பேன்வருத்தப் படவேண்டாம்

- பொதுவாக [பெரும்பான்மையாக] இத்தமிழ்ப்பாடல்களின் அர்த்தங்கள் மூல ஸம்ஸ்கிருத ஶ்லோகங்களின் அர்த்தங்களோடு வரிக்குவரி இயல்பாகப் பொருந்தி யிருப்பது ஓர் பேராச்சர்யம். இது நிச்சயம் இறையருள் - குருஅருளால் தான் நிகழ்ந்திருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, ஒரு சில பாடல்களை முன் வைக்கிறேன்:

அத்,01-30

காண்டீவம் கையினின்றும் நழுவுகிறதே
சர்மமெல்லாம் பற்றி எரிகின்றதே |
நிற்பதற்கும் சக்தி யற்றவனானேனே
என்மனம் குழம்புவது போலுள்ளதே ||

गाण्डीवं स्रंसते हस्तात
त्वक्चैव परिदह्यते ।
न च शक्नोम्यवस्थातुं
भ्रमतीव च मे मनः ॥

அத்,05-02

செயலைத் துறத்தலும் செயல்யோகமும்
இவ்விரண்டும் மேன்மையை அளிப்பவையே।
ஆனாலவை களில்செயலைத் துறத்தலினும்
செயல்யோகம் என்பது மேலானதே ॥

संन्यासः कर्मयोगश्च
निःश्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसंन्यासात्
कर्मयोगो विशिष्यते॥

அத்,12-12

பயிற்சியோகத் தினுமறிவு மிகவுயர்ந்தது
அறிவினும் தியானம் உயர்ந்ததாகிறது।
தியானத்தைவிட மேலாம்கர்ம பலத்தியாகம்
தியாகத்தினின் றுவிரைவில மைதிதோன்றுமே ॥

श्रेयो हि ज्ञानमभ्यासात्
ज्ञानाद्ध्यानं विशिष्यते ।
ध्यानात्कर्मफलत्यागः ॥
त्यागाच्छान्तिरनन्तरम ॥

அத்,18-66

எல்லாதர்மத் தையும்நன்றாய்த் துறந்தும்
என்னொருவனி டத்திலேயேஅடைக்கலமாவாய்।
எல்லாப்பாவங் களிலிருந்தும் உனைநான்
என்றும்விடுவிப் பேன்வருத்தப் படவேண்டாம் ॥

सर्वधर्मान्परित्यज्य
मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यः
मोक्षयिष्यामि मा शुचः ॥

எஞ்சியுள்ள தமிழ்ப்பாடல்களின் அர்த்தங்களும் மூலஶ்லோகங்களின் அர்த்தங்களோடு பொதுவாக [பெரும்பான்மையாக] இருவரிக்கு இருவரி என பொருந்தியிருப்பபதைக் காணலாம்.

- ஒவ்வொரு பாடலும் ஸம்ஸ்கிருத மூல ஶ்லோகத்தின் நடையின் சுருதியிலேயே அமைந்து விட்டதும் விந்தை.

- தமிழ்ப்பாடலில் ஏதேனும் ஓர் சொல்லிற்கு பல அர்த்தங்கள் கொள்ள சாத்தியமாயிருக்கும் பொழுதோ [அ] எந்த ஸம்ஸ்கிருத மூலச்சொல்லிற்காக அத்தமிழ்வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்தவோ, பல பாடல்களுக்கு அடிக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது மற்றோர் சிறப்பாகும்.

- ஆச்சார்யர் இத்தமிழ்ப்பாடல்களை நாலாயிர திவ்யப்-பிரபந்தத்தின் சுருதியிலும் இசைத்துக் காட்ட, அதுவும் பெரும்பாலோர் உபயோகிக்கும் சுருதியில் அமைந்திருந்-ததும் விந்தை.

இவ்விதம் ஆன்மீகச் சாதனையில் ஆழ்வதற்கும், சிறுபணி-யாற்றுவதற்கும் வாய்ப்பளித்த ஆச்சார்யர் அவர்களுக்கு என் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். இந்நூலைத் தட்டெழுத்துச் செய்த பின், ஆச்சார்ய மற்றும் தமிழ்ப்புலவர் ஸ்ரீ கிருஷ்ணசர்மா,சேலம் ஆகியோரின் துணையுடன் எழுத்து / கருத்துப் பிழைகள் சரி செய்யப்பட்டன.

இந்நூலை வாசிக்கும் அன்பர்களின் பார்வையில் சொற் பிழைகள் / கருத்துப்பிழைகள் / அச்சுப்பிழைகள் தென்படின், omsivakbc@yahoo.co.in என்ற எனது [இ-மெயிலுக்கு] மின்னஞ்-சலுக்கு அனுப்பி, புத்தகத்தை மேலும் சீரமைக்க உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஓம் நமசிவாய. **முனைவர் கி. பாலசந்திரன்**,

சென்னை துணைப் பொதுமேலாளர் (ஓய்வு),

15-02-2023 **இந்தியன் வங்கி**

ஸ்ரீமத் பகவத்கீதை

அமைதியும் ஆனந்தமும்

பாகம்-1 - ஜீவாத்ம விசாரணை

அத். எண்	பொருளடக்கம்	பக்கம்	பாடல்கள்
1	அர்ஜுனனிடம் துக்கத்தின் வெளிப்பாடு அர்ஜுனவிஷாத யோகம்	1	47
2	தத்துவ ஞானத்தைப் பெறுதல் ஸாங்கிய யோகம்	29	72
3	செயலை செயல்யோகமாக்குதல் கர்ம யோகம்	69	43
4	அறிவால் செயலைவிலக்கி அறிதல் ஞானகர்ம ஸந்ந்யாஸ யோகம்	95	42
5	செயல்துறவு ஸந்ந்யாஸ யோகம்	121	29
6	தியானத்தில் தெளிவு தியான யோகம்	141	47

ஓம் நமோ நாராயணாய ஜய ஜய சத்குரு

ஓம் ஸ்ரீபரமாத்மனே நம:

ஸ்ரீமத் பகவத்கீதை
श्रिमद्भगवद्गीता

முதல் அத்தியாயம்
"அர்ஜுனனிடம் துக்கத்தின் வெளிப்பாடு"

अथ प्रथमोऽध्यायः ।

அத² ப்ரத²மோSத்⁴யாய: ।

अर्जुनविषादयोगः

அர்ஜுநவிஷாத³யோக³ :

ஹரி: ஓம்!

அர்ஜுனன் புகன்றான்

ஓஅச்சுதா! இவ்விரு சேனையிடையே
எம்தேரை எதிர்நிறுத்து வீரே ||
என்னுடன் போர்விரும்பி நிற்கும் |
இக்கூட்டம் தனைநான் காணவே || [ப.கீ. 01. 21]

அத்தியாயம் : 01 பாடல் : 01

"திருதராஷ்டிரன் புகன்றான்"

தர்ம பூமியாம் குருபூமியில்
ஒன்று கூடியுத்தம் விரும்பியே ।
என்ன வர்களும் அவ்வைவரும்
என் செய்தனர் ஸஞ்ஜயா ॥

धृतराष्ट्र उवाच ।

த்4ரு'தராஷ்ட்ர உவாச ।

धर्मक्षेत्रे कुरुक्षेत्रे समवेता युयुत्सवः ।
த4ர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: ।
मामकाः पाण्डवाश्चैव किमकुर्वत सञ्जय ॥
மாமகா: பாண்ட3வாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ॥

அத்தியாயம் : 01 பாடல்: 02

"சஞ்ஜயன் புகன்றான்"

ராஜா துரியோதனன் அச்சமயம்
ஐவர்படை அணிவகுப்புக் கண்டதும் ।
ஆச்சார்யர் துரோணரையே அணுகி
வாய்மொழிந் தானிவ்வார்த் தையினை ॥

सञ्जय उवाच ।

ஸஞ்ஜய உவாச ।

दृष्ट्वा तु पाण्डवानीकं व्यूढं दुर्योधनस्तदा ।
த்3ரு'ஷ்ட்வா து பாண்ட3வாநீகம் வ்யூட4ம் து3ர்யோத4நஸ்ததா3 |
आचार्यमुपसङ्गम्य राजा वचनमब्रवीत् ॥
ஆசார்யமுபஸங்க3ம்ய ராஜா வசநமப்3ரவீத் ||

அத்தியாயம் : 01 பாடல் : 03

ஆச்சார்யரே! உம்புத்திமான் சிஷ்யன்;
துருபதன் மகன்த்ருஷ்டத் யும்னன் |
அணிவகுத்த பாண்டுபுத்தி ரர்கள்தம்
மாபெரும் சேனையைப் பாரும் ||

पश्यैतां पाण्डुपुत्राणामाचार्य महतीं चमूम् ।
பஶ்யைதாம் பாண்டு^{3}புத்ராணாமாசார்ய மஹதீம் சமூம் ।
व्यूढां द्रुपदपुत्रेण तव शिष्येण धीमता ॥
வ்யூடா^{4}ம் த்^{3}ருபத^{3}புத்ரேண தவ ஶிஷ்யேண தீ^{4}மதா ॥

அத்தியாயம் : 01 பாடல் : 04

காணீர்!இப் படைசூரர் வில்லாளிகள்
பீமார்ஜுன னுக்குச்சம மாமவர் |
போரில் சாத்யகியாம் யுயுதானனும்
விராடதேசத் தரசன் துருபதனுமாம் ||

अत्रशूरा महेष्वासा भीमार्जुनसमा युधि ।
அத்ர ஶூரா மஹேஷ்வாஸா பீ^{4}மார்ஜுனஸமா யுதி^{4} |
युयुधानो विराटश्च द्रुपदश्च महारथः ॥
யுயுதா^{4}னோ விராடஶ்ச த்^{3}ருபத^{3}ஶ்ச மஹாரத^{2}: ||

அத்தியாயம் : 01 பாடல் : 05

த்ருஷ்டகேது வும்சேகிதா னனும்
வீர்யவான் காசி ராஜனும் |
புருஜித்தும் குந்தி போஜனும்
மாமனிதன் சைப்யனிருப் பதும்காணீர் ||

धृष्टकेतुश्चेकितानः काशिराजश्च वीर्यवान् ।
த்^{4}ரு'ஷ்டகேதுஶ்சேகிதாந: காஶிராஜஶ்ச வீர்யவாந் |
पुरुजित्कुन्तिभोजश्च शैब्यश्च नरपुङ्गवः ॥
புருஜித்குந்திபோ^{4}ஜஶ்ச ஶைப்^{3}யஶ்ச நரபுங்க^{3}வ: ||

அத்தியாயம் : 01 பாடல் : 06

பேராற்றல் பெற்ற யுதாமன்யுவும்
வல்லமையுடை உத்த மௌஜஸும் |
சுபத்ரையின் மகன் அபிமன்யுவும்
திரௌபதியின் ஐம்புதல்வரும் மஹாரதர்களே ||

युधामन्युश्च विक्रान्त उत्तमौजाश्च वीर्यवान् ।
யுதா^{4}மந்யுஶ்ச விக்ராந்த உத்தமௌஜாஶ்ச வீர்யவாந் ।
सौभद्रो द्रौपदेयाश्च सर्व एव महारथाः ॥
ஸௌப^{4}த்^{3}ரோ த்^{3}ரௌபதே^{3}யாஶ்ச ஸர்வ ஏவ மஹாரதா^{2}: ॥

அத்தியாயம் : 01 பாடல் : 07

அந்தணோத்தமரே! நம்மில் சிறந்தோ-
ரவர்களையும் நீரறிந்து கொள்ளும் |
என்னுடைய சேனையின் நாயகர்கள்
கூறுகேன் அவர்களை அறியும்பொருட்டே ||

अस्माकं तु विशिष्टा ये तान्निबोध द्विजोत्तम ।
அஸ்மாகம் து விஶிஷ்டா யே தாந்நிபோ^{3}த^{4} த்^{3}விஜோத்தம ।
नायका मम सैन्यस्य संज्ञार्थं तान्ब्रवीमि ते ॥
நாயகா மம ஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்த^{2}ம் தாந்ப்^{3}ரவீமி தே ॥

அத்தியாயம் : 01 பாடல் : 08

தாங்களும் பீஷ்மரும் கர்ணனும்
வெற்றியே வடிவான க்ருபரும் |
அங்ஙனமே அஶ்வத்தாம விகர்ணனும்
ஸோமதத்தன் மகன்பூரிஸ் ரவஸுமுளரே ||

भवान्भीष्मश्च कर्णश्च कृपश्च समितिञ्जयः ।
ப^{4}வாந்பீ^{4}ஷ்மஶ்ச கர்ணஶ்ச க்ரு'பஶ்ச ஸமிதிஞ்ஜய: ।
अश्वत्थामा विकर्णश्च सौमदत्तिस्तथैव च ॥
அஶ்வத்தா^{2}மா விகர்ணஶ்ச ஸௌமத^{3}த்திஸ்ததை^{2}வ ச ॥

அத்தியாயம் : 01 பாடல் : 09

எண்ணிலா ஆயுத மம்புகள்கூடி
பலப்பல சூரர்க ளெல்லாம் ।
யுத்தத்தில் சிறந்தே உளர்
என்பொருட்டு உயிர் துறக்கவே ॥

अन्ये च बहवः शूरा मदर्थे त्यक्तजीविताः ।
அந்யே ச ப^{3}ஹவ: ஶூரா மத^{3}ர்தே^{2} த்யக்தஜீவிதா: ।
नानाशस्त्रप्रहरणाः सर्वे युद्धविशारदाः ॥
நாநாஶஸ்த்ரப்ரஹரணா: ஸர்வே யுத்^{3}த^{4}விஶாரதா^{3}: ॥

அத்தியாயம் : 01 பாடல் : 10

பீஷ்மர் காக்கும் நம்சேனை
அளவில் அடங்காது விரிந்துளது ।
பீமனால் காக்கப்படு மச்சேனை
அளவில் அடங்கியே யுள்ளது ॥

अपर्याप्तं तदस्माकं बलं भीष्माभिरक्षितम् ।
அபர்யாப்தம் தத^{3}ஸ்மாகம் ப^{3}லம் பீ^{4}ஷ்மாபி^{4}ரக்ஷிதம் ।
पर्याप्तं त्विदमेतेषां बलं भीमाभिरक्षितम् ॥
பர்யாப்தம் த்வித^{3}மேதேஷாம் ப^{3}லம் பீ^{4}மாபி^{4}ரக்ஷிதம் ॥

அத்தியாயம் : 01 பாடல் : 11

அனைத்துப் படை அணிவகுப்பும்
அவரவர்தம் இடம் நின்றே |
ஒன்றாய் ஓர் உறுதியுடனே
நிச்சயம் காப்பீர் பீஷ்மரையே ||

अयनेषु च सर्वेषु यथाभागमवस्थिताः ।
அயநேஷு ச ஸர்வேஷு யதா^{2}பா^{4}க^{3}மவஸ்தி^{2}தா: |
भीष्ममेवाभिरक्षन्तु भवन्तः सर्व एव हि ॥
பீ^{4}ஷ்மமேவாபி^{4}ரக்ஷந்து ப^{4}வந்த: ஸர்வ ஏவ ஹி ||

அத்தியாயம் : 01 பாடல் : 12

வல்லவன் கௌரவ முதல்வன்
பாட்டன் பீஷ்ம பிதாமகன் |
உற்சாகமூட்டவே [1]அவன் பொருட்டு
உரக்க ஊதினான் சிம்மநாதம்தனை ||

[1 துரியோதனன்]

तस्य सञ्जनयन्हर्षं कुरुवृद्धः पितामहः ।
தஸ்ய ஸஞ்ஜநயந்ஹர்ஷம் குருவ்ரு'த்^{3}த:^{4} பிதாமஹ: ।
सिंहनादं विनद्योच्चैः शङ्खं दध्मौ प्रतापवान् ॥
ஸிம்ஹநாத^{3}ம் விநத்^{3}யோச்சை: ஶங்க^{2}ம் த^{3}த்^{4}மௌ ப்ரதாபவாந் ||

அத்தியாயம் : 01 பாடல் : 13

பின்பு தொடர்ந்த பலநாதங்கள்
சங்கு பேரிகை தம்பட்டைகளும் |
பறையுடன் ஒலிமிகுந்த கொம்புகளுமே
ஒருங்கே சேர்ந்து முழங்கினவே ||

ततः शङ्खाश्च भेर्यश्च पणवानकगोमुखाः ।
தத: ஶங்கா2ஶ்ச பே4ர்யஶ்ச பணவாநககோ3முகா2: ।
सहसैवाभ्यहन्यन्त स शब्दस्तुमुलोऽभवत् ॥
ஸஹஸைவாப்4யஹந்யந்த ஸ ஶப்3த3ஸ்துமுலோऽப4வத் ॥

அத்தியாயம் : 01 பாடல் : 14

பிறகு வெண்குதிரைகளுள்ள மேலாம்தேரில்
வீற்றிருந்த மாதவ அர்ஜுனரும் |
தத்தம் தெய்வீகம்மிகு சங்குகளையே
உடன் எடுத்து உரக்கஊதினரே ||

ततः श्वेतैर्हयैर्युक्ते महति स्यन्दने स्थितौ ।
தத: ஶ்வேதைர்ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்த3நே ஸ்தி2தௌ ।
माधवः पाण्डवश्चैव दिव्यौ शङ्खौ प्रदध्मतुः ॥
மாத4வ: பாண்ட3வஶ்சைவ தி3வ்யௌ ஶங்கௌ2 ப்ரத3த்4மது: ॥

அத்தியாயம் : 01 பாடல் : 15

ஊதினான் ஹ்ருஷீகேசன் பாஞ்சஜன்யம்
ஊதினான் தனஞ்சயன் தேவதத்தம் |
ஊதினான் [1]பெருவினையாற்றும் பீமசேனன்
ஊதினனே பௌண்ட்ரமஹா சங்கம்தனையே ||

[1 வ்ருகோதர = ஓனாய் வயிற்றோன்; பெருவினையாற்றும் திறன்]

पाञ्चजन्यं हृषीकेशो देवदत्तं धनञ्जयः ।
பாஞ்சஜந்யம் ஹ்ரு'ஷீகேஶோ தே^{3}வத^{3}த்தம் த^{4}நஞ்ஜய: ।
पौण्ड्रं दध्मौ महाशङ्खं भीमकर्मा वृकोदरः ॥
பௌண்ட்^{3}ரம் த^{3}த்^{4}மௌ மஹாஶங்க^{2}ம் பீ^{4}மகர்மா வ்ரு'கோத^{3}ர: ॥

அத்தியாயம் : 01 பாடல் : 16

குந்தியின் மகன் தர்மராஜன்
ஊதினனே அநந்தவிஜயம் தனை |
ஊதினரே ஸுகோஷ மணிபுஷ்பகம்தனை
முறையே நகுல சகதேவருமே ||

अनन्तविजयं राजा कुन्तीपुत्रो युधिष्ठिरः ।
அநந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதி^{4}ஷ்டி^{2}ர: ।
नकुलः सहदेवश्च सुघोषमणिपुष्पकौ ॥
நகுல: ஸஹதே^{3}வஶ்ச ஸுகோ^{4}ஷமணிபுஷ்பகௌ ॥

அத்தியாயம் : 01 பாடல் : 17

சீர்மிகு வில்லாளி காசிராஜன்
மஹாரதி த்ருஷ்டத்யும்ன சிகண்டியும் |
அங்ஙனமே விராட தேசத்தரசனும்
வெல்லவியலா சாத்யகியு மூதினரே ||

काश्यश्च परमेष्वासः शिखण्डी च महारथः ।
காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிக2ண்டீ3 ச மஹாரத2: ।
धृष्टद्युम्नो विराटश्च सात्यकिश्चापराजितः ॥
த்4ருʼஷ்டத்3யும்நோ விராடஶ்ச ஸாத்யகிஶ்சாபராஜித: ॥

அத்தியாயம் : 01 பாடல் : 18

புவியாளும் வேந்தனே! மன்னா!
துருபதனும் த்ரௌபதியின் ஐம்புதல்வரும் |
பெரும்தோளோன் சுபத்ரைமகனும் ஊதினரே
தத்தம் சங்குகளை எப்புறமுமொலிக்கவே ||

द्रुपदो द्रौपदेयाश्च सर्वशः पृथिवीपते ।
த்3ருபதோ3 த்3ரௌபதே3யாஶ்ச ஸர்வஶ: ப்ருʼதி2வீபதே ।
सौभद्रश्च महाबाहुः शङ्खान्दध्मुः पृथक्पृथक् ॥
ஸௌப4த்3ரஶ்ச மஹாபா3ஹு: ஶங்கா2ந்த3த்4மு: ப்ருʼத2க்ப்ருʼத2க் ॥

அத்தியாயம் : 01 பாடல் : 19

அப்போரொலிப் பெரு முழக்கம்
விண்புவிக்கும் இடை ஒலிக்க |
கௌரவரின் உள்ளம் தன்னில்
சீறிப்புகுந்துப் பிளந்தது காணும் ||

स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत् ।

ஸ கோ^{4}ஷோ தா^{4}ர்தராஷ்ட்ராணாம் ஹ்ரு'த^{3}யாநி வ்யதா^{3}ரயத் ।

नभश्च पृथिवीं चैव तुमुलोऽभ्यनुनादयन् ॥ or लो व्यनु ||

நப^{4}ஶ்ச ப்ரு'தி^{2}வீம் சைவ துமுலோऽப்^{4}யநுநாத^{3}யந் ॥ or லோ வ்யநு ॥

அத்தியாயம் : 01 பாடல் : 20 & 21.1/2

புவியாளும் மன்னா! குரங்குக்கொடியோன்
போர்துவங்கிய தார்த்தராஷ்டிரர் தமைநோக்கி |
அம்புகள் விண்ணிலே பாயுமுன்னே ||
இருஷீகேசரிட மிவ்வார்த்தை தனைப்புகன்றான் |

अथ व्यवस्थितान्दृष्ट्वा धार्तराष्ट्रान् कपिध्वजः ।

அத^{2} வ்யவஸ்தி^{2}தாந்த்^{3}ரு'ஷ்ட்வா தா^{4}ர்தராஷ்ட்ராந் கபித்^{4}வஜ: |

प्रवृत्ते शस्त्रसम्पाते धनुरुद्यम्य पाण्डवः ॥

ப்ரவ்ரு'த்தே ஶஸ்த்ரஸம்பாதே த^{4}நுருத்^{3}யம்ய பாண்ட^{3}வ: ॥

हृषीकेशं तदा वाक्यमिदमाह महीपते ।

ஹ்ரு'ஷீகேஶம் ததா^{3} வாக்யமித^{3}மாஹ மஹீபதே ।

அத்தியாயம் : 01   பாடல் : 21.2/2 & 22

"அர்ஜுனன் புகன்றான்"

ஓஅச்சுதா! இவ்விரு சேனையிடையே
எம்தேரை எதிர்நிறுத்து வீரே ||
என்னுடன் போர்விரும்பி நிற்கும் |
இக்கூட்டம் தனைநான் காணவே ||

अर्जुन उवाच ।
அர்ஜுந உவாச

सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय मेऽच्युत ॥
ஸேநயோருப^{4}யோர்மத்^{4}யே ரத^{2}ம் ஸ்தா^{2}பய மேऽச்யுத ॥
यावदेतान्निरीक्षेऽहं योद्धुकामानवस्थितान् ।
யாவதே^{3}தாந்நிரீக்ஷேऽஹம் யோத்^{3}து^{4}காமாநவஸ்தி^{2}தாந் ।
कैर्मया सह योद्धव्यमस्मिन् रणसमुद्यमे ॥
கைர்மயா ஸஹ யோத்^{3}த^{4}வ்யமஸ்மிந் ரணஸமுத்^{3}யமே ॥

அத்தியாயம் : 01   பாடல் : 23

இவ்விதம் துஷ்டபுத்தி யுடன்நிற்கும்
அந்தகன் மகன் துரியோதனன்தம் |
பிரியம் விரும்பியுளோர் தமையும்
களம் புகுந்தோரையும் காணவே ||

योत्स्यमानानवेक्षेऽहं य एतेऽत्र समागताः ।
யோத்ஸ்யமாநாநவேக்ஷேऽஹம் ய ஏதேऽத்ர ஸமாக^{3}தா: ।
धार्तराष्ट्रस्य दुर्बुद्धेर्युद्धे प्रियचिकीर्षवः ॥
தா^{4}ர்தராஷ்ட்ரஸ்ய து^{3}ர்பு^{3}த்^{3}தே^{4}ர்யுத்^{3}தே^{4} ப்ரியசிகீர்ஷவ: ॥

அத்தியாயம் : 01 பாடல் : 24

"சஞ்ஜயன் புகன்றான்"

பரத குலத்தோன்றலே! த்ருதராஷ்டிரரே!
இவ்விதம்பகர் குடாகேசன் சொல்கேட்ட |
ஹ்ருஷீகேசர் உத்தமமாம் தேரை
இருசேனைக் கிடை நிறுத்தியே. . . . ||

सञ्जय उवाच ।

ஸஞ்ஜய உவாச ।

एवमुक्तो हृषीकेशो गुडाकेशेन भारत ।
ஏவமுக்தோ ஹ்ரு'ஷீகேஶோ கு^{3}டா^{3}கேஶேந பா^{4}ரத ।
सेनयोरुभयोर्मध्ये स्थापयित्वा रथोत्तमम् ॥
ஸேநயோருப^{4}யோர்மத்^{4}யே ஸ்தா^{2}பயித்வா ரதோ^{2}த்தமம் ॥

அத்தியாயம் : 01 பாடல் : 25

வழிநடாத்தும் பீஷ்மரும் த்ரோணரும்
மற்றுமுள வேந்தர்களின் முன்னிருத்தியே |
ஒருங்கேகூடியுள்ள இக்கௌரவர் தமைப்-
பார்த்தனே! "தீர்க்கமாய்க் காண்"என்றார் ||

भीष्मद्रोणप्रमुखतः सर्वेषां च महीक्षिताम् ।
பீ^{4}ஷ்மத்^{3}ரோணப்ரமுக^{2}த: ஸர்வேஷாம் ச மஹீக்ஷிதாம் ।
उवाच पार्थ पश्यैतान्समवेतान्कुरूनिति ॥
உவாச பார்த^{2} பஶ்யைதாந்ஸமவேதாந்குரூநிதி ॥

அத்தியாயம் : 01 பாடல் : 26

பார்த்தன்! பார்த்தானிரு சேனையினரை
பாட்டன்- ஆச்சார்யர்- அம்மான்களையும் |
சகோதர புத்திர பேரர்களையும்
அவ்விதமே அனைத்துத் தோழர்களையும். . . ||

तत्रापश्यत्स्थितान्पार्थः पितॄनथ पितामहान् ।
தத்ராபஶ்யத்ஸ்தி[2]தாந்பார்த:[2] பித்ரூ'நத[2] பிதாமஹாந் ।
आचार्यान्मातुलान्भ्रातॄन्पुत्रान्पौत्रान्सखींस्तथा ॥
ஆசார்யாந்மாதுலாந்ப்[4]ராத்ரூ'ந்புத்ராந்பௌத்ராந்ஸகீ[2]ம்ஸ்ததா[2] ॥

அத்தியாயம் : 01 பாடல் : 27 & 28.1/2

மாமனார்கள், நல்உள்ள முள்ளோரையும்
ஒன்றுகூடி நிற்கு முறவுகளையும் |
உற்றுநோக்கி உள்ளம் வருந்தியே
மிகுவிரக்கமுடன் குந்திமகன் கூறினானே ||

श्वशुरान्सुहृदश्चैव सेनयोरुभयोरपि ।
ஶ்வஶூராந்ஸூஹ்ரு'த[3]ஶ்சைவ ஸேநயோருப[4]யோரபி ।
तान्समीक्ष्य स कौन्तेयः सर्वान्बन्धूनवस्थितान् ॥
தாந்ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வாந்ப[3]ந்தூ[4]நவஸ்தி[2]தாந் ॥
कृपया परयाविष्टो विषीदन्निदमब्रवीत् ।
க்ரு'பயா பரயாவிஷ்டோ விஷீத[3]ந்நித[3]மப்[3]ரவீத்

அத்தியாயம் : 01 பாடல் : 28.2/2 & 29

"அர்ஜுனன் புகன்றான்"
ஓகிருஷ்ணா வென்றே கூவி! |
யுத்தம் விரும்பிக்களம் புகுந்துநிற்கும்
உறவுகளை யான்உற்று நோக்கிடில் |
அங்கமெலாம் தளர்ந்து நாவறள்கின்றதே
உடல்நடுங் கிமயிர்க்கூச் செறிகின்றதே ||

अर्जुन उवाच ।

அர்ஜுந உவாச ।
दृष्ट्वेमं स्वजनं कृष्ण युयुत्सुं समुपस्थितम् ॥
த்³ரு'ஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ரு'ஷ்ண யுயுத்ஸும் ஸமுபஸ்தி²தம் ॥
सीदन्ति मम गात्राणि मुखं च परिशुष्यति ।
ஸீத³ந்தி மம கா³த்ராணி முக²ம் ச பரிஶுஷ்யதி ।
वेपथुश्च शरीरे मे रोमहर्षश्च जायते ॥
வேபது²ஶ்ச ஶரீரே மே ரோமஹர்ஷஶ்ச ஜாயதே ॥

அத்தியாயம் : 01 பாடல் : 30

காண்டீவம் கையினின்றும் நழுவுகிறதே
[1]சர்மமெல்லாம் பற்றி எரிகின்றதே |
நிற்பதற்கும் சக்தி யற்றவனானேனே
என்மனம் குழம்புவது போலுள்ளதே ||

[1 சர்மம் – த்வக் - உடலின் மேல்தோல்]

गाण्डीवं स्रंसते हस्तात्त्वक्चैव परिदह्यते ।
கா³ண்டீ³வம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத்த்வக்சைவ பரித³ஹ்யதே ।
न च शक्नोम्यवस्थातुं भ्रमतीव च मे मनः ॥
ந ச ஶக்நோம்யவஸ்தா²தும் ப்⁴ரமதீவ ச மே மந: ॥

அத்தியாயம் : 01 பாடல் : 31

ஓகேசவா! கெடுதல்கள் அளிக்கும்
சகுனங்க ளனைத்தும் காண்கின்றேன் |
உறவினர்தமை நாம் கொல்லுவதால்
மேன்மை ஏதும் காண்கிறேனில்லை ||

निमित्तानि च पश्यामि विपरीतानि केशव ।
நிமித்தாநி ச பஶ்யாமி விபரீதாநி கேஶவ ।
न च श्रेयोऽनुपश्यामि हत्वा स्वजनमाहवे ॥
ந ச ஶ்ரேயோऽநுபஶ்யாமி ஹத்வா ஸ்வஜநமாஹவே ॥

அத்தியாயம் : 01 பாடல் : 32

ஹேகிருஷ்ணா! வெற்றியையும் விரும்பவில்லை
ராஜ்யம் தனையும் விரும்பவில்லை |
சுகங்களையும் யான் விரும்பவில்லை
கோவிந்தா! ராஜபோகத்தால் நமக்கென்பயன்? ||

न काङ्क्षे विजयं कृष्ण न च राज्यं सुखानि च ।
ந காங்க்ஷே விஜயம் க்ரு'ஷ்ண ந ச ராஜ்யம் ஸுகா²நி ச ।
किं नो राज्येन गोविन्द किं भोगैर्जीवितेन वा ॥
கிம் நோ ராஜ்யேந கோ³விந்த³ கிம் போ⁴கை³ர்ஜீவிதேந வா ॥

அத்தியாயம் : 01 பாடல் : 33

யாவர்க்காக நாம் சுகபோகங்களை
வேண்டி விரும்பத் தக்கதாயிற்றோ |
அவர்களோ செல்வமுயிராசை யும்துறந்து
போர்க்களத் தில்கூடிநிற்கக் காணீர் ||

येषामर्थे काङ्क्षितं नो राज्यं भोगाः सुखानि च ।
யேஷாமர்தே^{2} காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போ^{4}கா:^{3} ஸுகா^{2}நி ச ।
त इमेऽवस्थिता युद्धे प्राणांस्त्यक्त्वा धनानि च ॥
த இமேऽவஸ்தி^{2}தா யுத்^{3}தே^{4} ப்ராணாம்ஸ்த்யக்த்வா த^{4}நாநி ச ॥

அத்தியாயம் : 01 பாடல் : 34

அனைத்து ஆசார்யர்களும் தந்தைதனயரும்
அவ்வாறே பாட்டன் அம்மான்மார்களும் |
மைத்துன மாமனார்களும் பேரன்களனைவரும்
உறவினருடன் கூடி யிருக்கக்காணீர் ||

आचार्याः पितरः पुत्रास्तथैव च पितामहाः ।
ஆசார்யா: பிதர: புத்ராஸ்ததை^{2}வ ச பிதாமஹா: ।
मातुलाः श्वशुराः पौत्राः श्यालाः सम्बन्धिनस्तथा ॥
மாதுலா: ஶ்வஶுரா: பௌத்ரா: ஶ்யாலா: ஸம்ப^{3}ந்தி^{4}நஸ்ததா^{2} ॥

அத்தியாயம் : 01 பாடல் : 35

ஓமதுசூதனா! என்னைக் கொன்றாலும்
மூவுலக ராஜ்யத்தின் ஆசையாலும் |
கொல்லேன் இவர்களை நானொருபொழுதும்;
கொல்வேனோ இப்புவியின் பொருட்டு ||

एतान्न हन्तुमिच्छामि घ्नतोऽपि मधुसूदन ।
ஏதாந்ந ஹந்துமிச்சா^{2}மி க்^{4}நதோऽபி மது^{4}ஸூத^{3}ந ।
अपि त्रैलोक्यराज्यस्य हेतोः किं नु महीकृते ॥
அபி த்ரைலோக்யராஜ்யஸ்ய ஹேதோ: கிம் நு மஹீக்ரு'தே ॥

அத்தியாயம் : 01 பாடல் : 36

ஓஜனார்தனா!

திருதாஷ்டிர மைந்தர்கள்தம் உயிர்-
நீக்கினால் மகிழ்ச்சியுண்டோ நமக்கு |
இப்[1]பஞ்சமா பாதகர்தமைக் கொன்றால்
பாவம் அன்றோ நமைச்சாரும் ||

[1 ஆததாயிந = பஞ்சமகாபாதகர்]

निहत्य धार्तराष्ट्रान्नः का प्रीतिः स्याज्जनार्दन ।
நிஹத்ய தா^{4}ர்தராஷ்ட்ராந்ந: கா ப்ரீதி: ஸ்யாஜ்ஜநார்த^{3}ந |
पापमेवाश्रयेदस्मान्हत्वैतानाततायिनः ॥
பாபமேவாஶ்ரயேத^{3}ஸ்மாந்ஹத்வைதாநாததாயிந: ||

அத்தியாயம் : 01 பாடல் : 37

ஆம்! நம்உறவினர் துரியோதனாதிகளை
நாம் கொல்லுதல் தக்கதன்றே |
ஓமாதவா! உறவினர்க ளுயிர்போக்கி
சுகத்தை யெப்படிக் காண்போம் ||

तस्मान्नार्हा वयं हन्तुं धार्तराष्ट्रान्स्वबान्धवान् ।
தஸ்மாந்நார்ஹா வயம் ஹந்தும் தா^{4}ர்தராஷ்ட்ராந்ஸ்வபா^{3}ந்த^{4}வாந் |
स्वजनं हि कथं हत्वा सुखिनः स्याम माधव ॥
ஸ்வஜநம் ஹி கத^{2}ம் ஹத்வா ஸுகி^{2}ந: ஸ்யாம மாத^{4}வ ||

அத்தியாயம் : 01 பாடல் : 38

பேராசையால் கவர்ந்த இவர்மனம்
குலநாச தோஷத்தை யறியுமோ? |
மித்ரத்ரோக பாவம்தனை உணருமோ
அவர்கள் தீமையை யுணராவிடினும்.... ||

यद्यप्येते न पश्यन्ति लोभोपहतचेतसः ।
யத்^{3}யப்யேதே ந பஶ்யந்தி லோபோ^{4}பஹததசேதஸ: |
कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम् ॥
குலக்ஷயக்ரு'தம் தோ^{3}ஷம் மித்ரத்^{3}ரோஹே ச பாதகம் ||

அத்தியாயம் : 01 பாடல் : 39

ஓஜனார்தனா! குலநாச தோஷங்களைத்
தெளிவுற நன்றாயறியும் நாம் |
இப்பாவச்செயல் விடுத்து விலகிட
ஏன் முயலுதல் செ(ய்)யக்கூடாது? ||

कथं न ज्ञेयमस्माभिः पापादस्मान्निवर्तितुम् ।
கத2ம் ந ஜ்ஞேயமஸ்மாபி:4 பாபாத3ஸ்மாந்நிவர்திதும் |
कुलक्षयकृतं दोषं प्रपश्यद्भिर्जनार्दन ॥
குலக்ஷயக்ரு'தம் தோ3ஷம் ப்ரபஶ்யத்3பி4ர்ஜநார்த3ந ||

அத்தியாயம் : 01 பாடல் : 40

குலநஷ்ட மெய்திடில் என்றுமுள
குலதர்மங்கள் அழிவது திண்ணம் |
தர்மம் அழிந்தால் குலமனைத்திலும-
தர்மம் வெகுவாய்ப் பரவுமே ||

कुलक्षये प्रणश्यन्ति कुलधर्माः सनातनाः ।
குலக்ஷயே ப்ரணஶ்யந்தி குலத4ர்மா: ஸநாதநா: |
धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ॥
த4ர்மே நஷ்டே குலம் க்ரு'த்ஸ்நமத4ர்மோऽபி4ப4வத்யுத ||

அத்தியாயம் : 01 பாடல் : 41

கிருஷ்ணா! அதர்மம் மிகப்பெருகிடில்
குலப்பெண்கள் நன்னலம் இழப்பர் |
பெண்கள் அந்நலம் இழக்கில்
வர்ணக்கலப்பும் தோன்றும் வ்ருஷ்ணிகுலத்தோனே! ||

अधर्माभिभवात्कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः ।
அத^{4}ர்மாபி^{4}ப^{4}வாத்க்ரு'ஷ்ண ப்ரது^{3}ஷ்யந்தி குலஸ்த்ரிய: |
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसङ्करः ॥
ஸ்த்ரீஷு து^{3}ஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: ||

அத்தியாயம்: 01 பாடல்: 42

குலநாசகரு மவர் குலமும்
வர்ணக்கலப்பால் நரகம் அடைவரே |
இவர்முன்னோர் பிண்டநீர்க் கடனற்றே
நிச்சயம் வீழ்ச்சி அடைவார்களே ||

सङ्करो नरकायैव कुलघ्नानां कुलस्य च ।
ஸங்கரோ நரகாயைவ குலக்^{4}நாநாம் குலஸ்ய ச |
पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः ॥
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோ^{3}த^{3}கக்ரியா: ||

அத்தியாயம் : 01 பாடல் : 43

குலநாசகர் செயும் இவ்வர்ணக்கலப்பு
எனுமிந்த தோஷங்களா லென்றும் |
சாச்வத ஜாதி குலதர்மங்களும்
நிச்சயம் அழிவில் அழுந்துமே ||

दोषैरेतैः कुलघ्नानां वर्णसङ्करकारकैः ।
தோ^{3}ஷைரேதை: குலக்^{4}நாநாம் வர்ணஸங்கரகாரகை: ।
उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ॥
உத்ஸாத்^{3}யந்தே ஜாதித^{4}ர்மா: குலத^{4}ர்மாஶ்ச ஶாஶ்வதா: ॥

அத்தியாயம் : 01 பாடல் : 44

ஜனார்தனா! குலதர்மத்தை யிழந்த
மனிதர்கள் தாம் நரகத்தில் |
நெடிது வாழும் நிலையடைவர்
என்று கேட்டிருக்கிறோம் நாம் ||

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ।
உத்ஸந்நகுலத^{4}ர்மாணாம் மநுஷ்யாணாம் ஜநார்த^{3}ந |
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ॥ or नरकेऽनियतं
நரகே நியதம் வாஸோ ப^{4}வதீத்யநுஶுஶ்ரும || or நரகேऽநியதம்

அத்தியாயம் : 01 பாடல் : 45

அந்தோ பெரும்பாவம் செய
விழைந்தோம் அன்றோ நாமே |
ராஜீயசுக ஆசையாலே கொல்லவே
முனைந்தோமோ உறவினர் கள்தமையே ||

अहो बत महत्पापं कर्तुं व्यवसिता वयम् ।
அஹோ ப^{3}த மஹத்பாபம் கர்தும் வ்யவஸிதா வயம் |
यद्राज्यसुखलोभेन हन्तुं स्वजनमुद्यताः ॥
யத்^{3}ராஜ்யஸுக^{2}லோபே^{4}ந ஹந்தும் ஸ்வஜநமுத்^{3}யதா: ||

அத்தியாயம் : 01 பாடல் : 46

ஆயுதமின்றி எதிர்த்துப்போரிடா எனை
ஆயுதம் தாங்கியே துரியோதனாதிகள் |
இப்போர்க் களத்தில் கொன்றாலும்
அதுவெனக்கு நன்மை பயப்பதாகுமே ||

यदि मामप्रतीकारमशस्त्रं शस्त्रपाणयः ।
யதி^{3} மாமப்ரதீகாரமஶஸ்த்ரம் ஶஸ்த்ரபாணய: |
धार्तराष्ट्रा रणे हन्युस्तन्मे क्षेमतरं भवेत् ॥
தா^{4}ர்தராஷ்ட்ரா ரணே ஹந்யுஸ்தந்மே க்ஷேமதரம் ப^{4}வேத் ||

அத்தியாயம் : 01 பாடல் : 47

'சஞ்ஜயன் புகன்றான்'
சோகம்தாக்கிய மனதுடை அர்ஜுனன்
போர்க்களத்தி லிவ்விதம் பகன்றே |
வில்லம்பு களைக்கீழ் எறிந்தே
தேர்த் தட்டில் அமர்ந்தனனே ||

सञ्जय उवाच ।

ஸஞ்ஜய உவாச ।

एवमुक्त्वार्जुनः सङ्ख्ये रथोपस्थ उपाविशत् ।
ஏவமுக்த்வார்ஜுந: ஸங்க்^{2}யே ரதோ^{2}பஸ்த^2 உபாவிஶத் |
विसृज्य सशरं चापं शोकसंविग्नमानसः ॥
விஸ்ரு'ஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்^{3}நமாநஸ: ||

ஓம் தத் ஸத்

இவ்விதம் ஸ்ரீமத் பகவத்கீதையில், உபநிஷத்தில்,
பிரம்மவித்யையில், யோகஶாஸ்த்திரத்தில்,
ஸ்ரீகிருஷ்ணருக்கும் அர்ஜுனனுக்கும்
இடைப்பட்ட நல்வாதத்தில்,

"அர்ஜுனனிடம் துக்கத்தின் வெளிப்பாடு"

எனும் இம்முதலாம் அத்தியாயம்
ஸ்வாமி சின்மயானந்தரின் சீடன்
கிருஷ்ணாத்மாநந்தனால்
தமிழ்ப்பாடல்களாய் இயற்றப்பட்டது
இனிதே இறையருளால் நிறைவுற்றதே. ॥

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
ஓம் தத்ஸதி^{3}தி ஸ்ரீமத்^{3}ப^{4}க^{3}வத்^{3}கீ^{3}தாஸூபநிஷத்ஸு

ब्रह्मविद्यायां योगशास्त्रे
ப்^{3}ரஹ்மவித்^{3}யாயாம் யோக^{3}ஶாஸ்த்ரே

श्रीकृष्णार्जुनसंवादे
ஸ்ரீக்ரு'ஷ்ணார்ஜுநஸம்வாதே^{3}

अर्जुनविषादयोगो नाम
அர்ஜுநவிஷாத^{3}யோகோ^{3} நாம
प्रथमोऽध्यायः ॥
ப்ரத^{2}மோऽத்^{4}யாய: ॥

ஓம் ஸ்ரீபரமாத்மனே நம:

ஸ்ரீமத் பகவத்கீதை
श्रिमद्भगवद्गीता

இரண்டாம் அத்தியாயம்
“தத்துவ ஞானத்தைப் பெறுதல்”

अथ द्वितीयोऽध्यायः ।
அத^{2} த்^{3}விதீயோऽத்^{4}யாய: ।

साङ्ख्ययोगः
ஸாங்க்^{2}யயோக^{3}: ।

ஹரி: ஓம்!

கோழைத்தன மோங்கி சீரழிந்தமன முடையோனாகி தர்மத்தில்
குழம்பிய மனதால் தங்களிடம் வினவுகின்றேன் ஏதெனக்கு ।
நிலையான மேன்மையளித்திடுமோஅதைப் புகல்வீர்; உம்சீடன் நான்
எனக்கு பதேசித்துக் காப்பீர், தங்களை சரணடைகின்றேனே ॥

[ப.கீ. 02. 07]

அத்தியாயம்: 02 பாடல்: 01

"சஞ்ஜயன் புகன்றான்" ।
இவ்வித மிரக்கம் மேலோங்கி
கண்களில் கண்ணீர் ததும்பிவழிய ।
சோகமே வடிவான அர்ஜுனனிடம்
மதுசூதனன் இவ்வார்த்தைதனைப் பகர்ந்தனனே ॥

सञ्जय उवाच ।

ஸஞ்ஜய உவாச

तं तथा कृपयाविष्टमश्रुपूर्णाकुलेक्षणम् ।
தம் ததா^{2} க்ரு'பயாவிஷ்டமஶ்ருபூர்ணாகுலேக்ஷணம் ।
विषीदन्तमिदं वाक्यमुवाच मधुसूदनः ॥
விஷீத^{3}ந்தமித^{3}ம் வாக்யமுவாச மது^{4}ஸூத^{3}ந: ॥

அத்தியாயம்: 02 பாடல்: 02

"ஶ்ரீபகவான் பகர்ந்தார்"
ஹேஅர்ஜுனா! தகாத சமயந்தனில்
இம்மோஹம் வந்ததன் காரணமென்சொல் ।
இச்செயல் சான்றோர் தவிர்த்ததன்றோ
உனக்கிது ஸ்வர்க்கமும் புகழுமளிக்காதே ॥

श्रीभगवानुवाच ।

ஶ்ரீப^{4}க^{3}வானுவாச ।

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम् ।
குதஸ்த்வா கஶ்மலமித^{3}ம் விஷமே ஸமுபஸ்தி^{2}தம் ।
अनार्यजुष्टमस्वर्ग्यमकीर्तिकरमर्जुन ॥
அநார்யஜுஷ்டமஸ்வர்க்^{3}யமகீர்திகரமர்ஜுந ॥

அத்தியாயம்: 02 பாடல்: 03

ஓபார்த்தனே! பேடித்தன்மையை அடையாதே
உனக்கித் தன்மை பொருத்தமன்றே ।
"இழிந்த இவ்வுள்ளத் தளர்ச்சியினையே
விடுத்து போருக்கெழுந்திடு" பரந்தப! ॥

क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
க்லைப்^{3}யம் மா ஸ்ம க^{3}ம: பார்த^{2} நைதத்த்வய்யுபபத்^{3}யதே।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परन्तप ॥
க்ஷுத்^{3}ரம் ஹ்ரு'த^{3}யதௌ^{3}ர்ப^{3}ல்யம் த்யக்த்வோத்திஷ்ட^{2} பரந்தப ॥

அத்தியாயம்: 02 பாடல்: 04

"அர்ஜுனன் புகன்றான்"
ஓமதுசூதனா! இப்போர்களம்தனில் நான்
பெரியோராம் பீஷ்ம துரோணர்களை ।
அரிசூதனா! பூஜைக்குரிய இவர்களை
அம்புகளாலே எவ்விதம் எதிர்ப்பேன் ॥

अर्जुन उवाच ।
அர்ஜுந உவாச ।
कथं भीष्ममहं सङ्ख्ये द्रोणं च मधुसूदन ।
கத^{2}ம் பீ^{4}ஷ்மமஹம் ஸங்க்^{2}யே த்^{3}ரோணம் ச மது^{4}ஸூத^{3}ந ।
इषुभिः प्रतियोत्स्यामि पूजार्हावरिसूदन ॥
இஷுபி^{4}: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூத^{3}ந ॥

அத்தியாயம்: 02 பாடல்: 05

மேன்மை பொருந்தின ஆச்சார்யர்களைக் கொல்லாமல் இவ்வுலகிலே
மேன்மைதருமே பிச்சையால் கிட்டும் உணவையும்கூட உண்பதாலே।
குருமார்களைக் கொன்றபின் இப்புவியில் அனுபவிக்கப் போகிறேன்
இரத்தம்கலந்த செல்வமும்; ஆசைக்குரிய வஸ்து போகங்களையே॥

गुरूनहत्वा हि महानुभावान्
கு^{3}ரூநஹத்வா ஹி மஹாநுபா^{4}வாந்
श्रेयो भोक्तुं भैक्ष्यमपीह लोके ।
ஶ்ரேயோ போ^{4}க்தும் பை^{4}க்ஷ்யமபீஹ லோகே ।
हत्वार्थकामांस्तु गुरूनिहैव
ஹத்வார்த^{2}காமாம்ஸ்து கு^{3}ரூநிஹைவ
भुञ्जीय भोगान् रुधिरप्रदिग्धान् ॥
பு^{4}ஞ்ஜீய போ^{4}கா^{3}ந் ருதி^{4}ரப்ரதி^{3}க்^{3}தா^{4}ந் ॥

அத்தியாயம்: 02 பாடல்: 06

நமக்கு இவ்விரண்டில் எது சிறந்ததென் றறியோம்
நாமோ! இவர்களோ! வெல்வோம் என்பது மறியோம்।
எவர்களைக் கொன்ற பின் வாழவிரும்ப வில்லையோ
அத்துரியோதனாதிகளே எதிர்த்து நிற்கின்றனர் நம் முன்னே॥

न चैतद्विद्मः कतरन्नो गरीयो
ந சைதத்^{3}வித்^{3}ம: கதரந்நோ க^{3}ரீயோ
यद्वा जयेम यदि वा नो जयेयुः।
யத்^{3}வா ஜயேம யதி^{3} வா நோ ஜயேயு:।
यानेव हत्वा न जिजीविषामस्
யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாமஸ்
तेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः॥
தேऽவஸ்தி^{2}தா: ப்ரமுகே^{2} தா^{4}ர்தராஷ்ட்ரா:॥

அத்தியாயம்: 02 பாடல்: 07

கோழைத்தன மோங்கிச் சீரழிந்தமன முடையோனாகி தர்மத்தில்
குழம்பிய மனதால் தங்களிடம் வினவுகின்றேன் ஏதெனக்கு ।
நிலையான மேன்மையளித்திடுமோஅதைப் புகல்வீர்; உம்சீடன் நான்
எனக்கு பதேசித்துக் காப்பீர், தங்களை சரணடைகின்றேனே ॥

कार्पण्यदोषोपहतस्वभावः
கார்பண்யதோ^{3}ஷோபஹதஸ்வபா^{4}வ:
पृच्छामि त्वां धर्मसम्मूढचेताः ।
ப்ருʼச்சா^{2}மி த்வாம் த^{4}ர்மஸம்மூட^{4}சேதா:।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे
யச்ச்^{2}ஶ்ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்^{3}ரூஹிதந்மே
शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ॥
ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி^{4} மாம் த்வாம் ப்ரபந்நம்॥

அத்தியாயம்: 02 பாடல்: 08

பூமியில் எதிரிகளற்ற தனதான்யங்கள் மிகு ராஜ்யமும்
தேவர்களுக் கரசனாய் இருக்கும்நிலை யடையப் பெறினும் ।
எனது இப்புலன்களையெலாம் வாட்டுகின்ற சோகந் தனை
போக்குமென அதனை நான்ஒருபொழுதும் காண்கிறே னிலேன் ॥

न हि प्रपश्यामि ममापनुद्याद्
ந ஹி ப்ரபஶ்யாமி மமாபநுத்^{3}யாத்^{3}
यच्छोकमुच्छोषणमिन्द्रियाणाम् ।
யச்சோ^{2}கமுச்சோ^{2}ஷணமிந்த்^{3}ரியாணாம் ।
अवाप्य भूमावसपत्नमृद्धं
அவாப்ய பூ^{4}மாவஸபத்நம்ருʼத்^{3}த^{4}ம்
राज्यं सुराणामपि चाधिपत्यम् ॥
ராஜ்யம் ஸுராணாமபி சாதி^{4}பத்யம் ॥

அத்தியாயம்: 02 பாடல்: 09

"சஞ்ஜயன் புகன்றான்"
எதிரிகளை வாட்டுபவனான குடாகேசன்
புலன்களின் அதிபதியாம் ஹ்ருஷீகேசரிடம் ।
இவ்விதம் கூறியே போர்புரியேன்
என்றுரைத்து மௌன மாகிவிட்டான் ॥

सञ्जय उवाच ।

ஸஞ்ஜய உவாச ।

एवमुक्त्वा हृषीकेशं गुडाकेशः परन्तप ।
ஏவமுக்த்வா ஹ்ரு'ஷீகேஶம் கு^{3}டா^{3}கேஶ: பரந்தப ।
न योत्स्य इति गोविन्दमुक्त्वा तूष्णीं बभूव ह ॥
ந யோத்ஸ்ய இதி கோ^{3}விந்த^{3}முக்த்வா தூஷ்ணீம் ப^{3}பூ^{4}வ ஹ ॥

அத்தியாயம்: 02 பாடல்: 10

பரதவம்சத்தரசே! [1]புலன்களின் அதிபதி
இருசேனை நடுவிருக்கும் துயரோன்- ।
அர்ஜுனனை நோக்கியே, புன்சிரிப்புமேலிட
வாய் மலர்ந்தாரே இவ்வார்த்தைகளை ॥

[1 ஹ்ருஷீகேஶ: = புலன்களின் அதிபதி]

